# காவலன்

தந்தி: "ஜதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

சத்தியவேத பாதுகாவலன்
வருடசந்தா
இலங்கை : வெளிநாடுகள் :
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)
தனிப்பிரதி சதம் 15

3-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஹு ஆவணிமீ -24ங்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 32-ம் இல.


## சகலவிதமான கருத்தடைகளும் முற்ருக விலக்கப்பட்டவை

# "மாற்றமில்லை" ⟶ சுற்றுநிருபம்

# கருத்தடைபற்றிய திருச்சபையின் போதனையை

# பரி. தந்தை உறுதிப்படுத்துகிருர்

சின்னப்ப பாப்பரசர் தமது புதிய சுற்றுநிருபத்தில் செயற்கையான கருத்தடை முறைகளையெல்லாம் கண்டித்திருக்கிருர்.

நீண்டகாலமாக எதிர்நோக்கியிருந்த அவரது இந்தத் தீர்ப்பில் திருச்சபை கையாண்டுவரும் கருத்தடைக்கு விரோதமான கொள்கையை அவர் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளார்.

''மனித உயிர் பற்றியது" எனப் பெயரிடப்பட்ட 6,000 வார்த்தைகளைக்கொண்ட இந்நிருபம் ''ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட இன உற்பத்தியை நேரடியாகத் தடைசெய்வது குடும்பத்தைக் கட்டுப்படுத்தும் ஒழுங்கான முறையாகாது"என்று கூறுகிறது.

மேலும் இந்நிருபம் கருச்சிதைவு, தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ மலடாக்குதல் போன்ற சந்ததி விருத்தியைத் தடைசெய்யும் எல்லாவிதமான செயல்களுக்கும் திருச்சபை விதித்திருந்த தடையை உறுதி செய்கிறது.

மொன்சிஞ்ஞோர் பேர்டினன்டோ லாம்ரூச்சினி என்னும் வேதசாஸ்திர நிபுணர் வத்திக்கானில் பத்திரிகையாளருக்கென நடந்த ஒரு மகாநாட்டில் இம்முடிவைப்பற்றித் தெரிவித்தார். அவர் இச்சுற்றுநிருபம், ''சந்தேகத்துக் கிடமின்றித் திருச்சபையின் பாரம்பரியமான போதனையைப் புதுப்பித்து உறுதி செய்கிறது" என்பதே இதன் மூலவாக்கியம் என்ருர். மேலும் இம்முடிவு பாப்பரசரின் துணிகரம்மிக்க ஒரு செயலாகும் எனவும், அது சுலபமாக எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதுஎன்பதை அறிந்துகொண்டே பாப்பரசர் இதைச் செய்ததாகவும் கூறினுர்.

பாப்பரசர் தமது நிருபத்தில் பிறப்பைக் கட்டுப் படுத்துவதற்கு இயற்கை ஒழுங்கை அடிப்படையாகக் கொண்ட ஒரு முறையை ஏற்படுத்துமாறு விஞ்ஞானிகளைத் தூண்டினுர். விவாகமானவர்களை விசுவாசம், நம்பிக்கை ஆகியவற்றின் துணையோடு தேவைப்பட்ட முயற்சிகளைச் செய்யுமாறு கூறினுர்.

குருவானவர்களுக்கு ''உங்கள் முதற் கடமை — விசேஷமாக ஒழுக்கவியலைக் கற்பிப்போரின் முதற்கடமை — விவாகம் பற்றிய திருச்சபையின் போதனையைத் தெளிவாக விளக்குவதே" என்ருர்.

வைத்தியர்களுக்கு அவர் கூறியதாவது : ''அவர்களை நாடிவரும் விவாகமானவர்களுக்கு விவேகமான அறிவுரைகளை வழங்கி, நன்மையான வழியையும் காட்டக் கூடியதாக இவ்விஷயத்தைப்பற்றிய முழுமையான அறிவைப் பெற்றுக்கொள்வது அவர்களின் தொழிற்றுறையின் கடமையெனக் கருத வேண்டும்."

''இறைவன் விவேகத்துடன் பிறப்புக்களுக் கிடையில் இடைவெளியை ஏற்படுத்தும் இயற்கைநியதிகளையும், வளத்தில் ஒழுங்குகளையும் அமைத்திருக்கிருர்.

''எனினும், இயற்கை நியதிகளைப் பின்பற்றுமாறு திருச்சபை மக்களை அழைக்கின்றது. தனது மாருத போதனையின்படி கலவியில் எப்போதும் இனவிருத்திக்கு வழியிருக்க வேண்டும்"என்று போதிக்கிறது.

பாப்பரசர் தமது முன்னோர் பல நூற்ருண்டுகளாகக் கடைப்பிடித்துவந்த சகலவிதமான கருத்தடையும் தம்மிற்ருமே தீங்கானவை என்றகொள்கையை வலியுறுத்தினுர். முக்கியமாக 1961இல் 23ஆம் அருளப்பர் ''மனித உயிர் புனிதமானது" என்று கூறியதை வலியுறுத்தினுர்.

''விவாகத்தைப்பற்றிய இப்போதனைகளைக் கண்முன்னே கொண்டு, ஏற்கனவே ஆரம்பித்த இனவிருத்தியைத் தடைசெய்வதும், எல்லாவற்றுக்கும்மேலாக, சிகிச்சைக்காகவேனும் நேரடியாகக் கருச்சிதைவுசெய்வதும் முற்ருக விலக்கப்பட் டிருக்கின்றன" என்பதை நாம் திரும்பவும் கூறவேண்டும்.

''திருச்சபை அடிக்கடி தனது போதனையில் கூறி வந்துள்ளதுபோல், ஆணையோ பெண்ணையோ, நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ மலடாக்குவதும், அதற்குச் சமமாக விலக்கப்பட வேண்டியதாகும்."

''அதேபோன்று கலவியின் பயனுக இன விருத்தி ஏற்படுவதை அசாத்தியமாக்கும் சகலவிதமான செயல்களும் விலக்கப்பட்டவையாகும்."

தனிமனிதரதும், குடும்பத்தினதும், சமூகத்தினதும் நலனுக்காக கருத்தடை அனுமதிக்கப்பட வேண்டும் என்ற வாதத்தை பாப்பரசர் ஏற்க மறுத்துவிட்டார். இதைப் பற்றி அவர் குறிப்பிடுகையில், ''பாரதூரமான காரணங்கள் இருந்தபோதிலும், ஒரு நன்மை அதனுல் ஏற்படவேண்டுமென்று ஒரு தீமையைச் செய்வது அனுமதிக்கப்படாததொன்று"எனக் கூறினுர்.

''உடலில் உள்ள நோயைக் குணப்படுத்துவதற்காக வைத்திய முறைகளை உபயோகிப்பது—அது இனவிருத்திக்கு இடையூருயிருப்பினும், அது நேரடியாக விரும்பப்படாவிட்டால்—சட்டத்திற்கு மாருனதெனத் திருச்சபை கருதவில்லை," என்று அவர் மேலும் கூறினுர்.

பன்னிரண்டாம் பத்திநாதரின் போதனையை உறுதிப்படுத்துகையில் பாப்பரசர், ''கத்தோலிக்க தம்பதிகள், கணவன் அல்லது மனைவியின் உடல் அல்லது மனநிலையின் காரணமாக, அல்லது புறம்பான காரணங்களின் நிமித்தம் தமது குடும்பத்தைக் கட்டுப்படுத்த எண்ணினுல் மனைவி கருத்தரிக்கக் கூடிய நாட்களில் விரத்துவம் அனுசரிப்பதனுலேயே குடும்பத்தை ஒழுங்கு செய்யலாம்" என்ருர்.

செயற்கையான கருத்தடையால் அநேக தீமைகளிருப்பதாகவும் அவர் கூறினுர். இந்த முறைகள் தம்பதிகளுக்கிடையில் பிரமாணிக்கவீனத்துக்குச் சுலபமான வழியேற்படுத்தி பொதுவில் ஒழுக்கநிலையைத் தாழ்த்துமென்ருர்.

''சில அரசாங்கங்கள் தம் மக்கள்மீது கருத்தடையை பலவந்தமாகத் திணிக்கக் கூடும். அப்போது தாம்பத்திய வாழ்வின் அந்தரங்கம்கூட அதிகாரத்திலுள்ளவர்களின் தயவிலிருக்கும்," என்று கூறிய பாப்பரசர் உலக அரசாங்கங்களை நோக்கிப் பின்வரும் வேண்டுகோளை விடுத்தார். ''உங்கள் சனங்களது ஒழுக்கம் இழிநிலையடைய விடாதீர். இயற்கைக்கும் தேவகற்பனைக்கும் மாருன வழக்கங்களை சட்டத்தின் மூலம் குடும்பத்தினுள் புகுத்துவதை அனுமதியாதீர்."

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உள்ள கஷ்டங்களைத் தாம் உணர்ந்திருப்பதாகப் பாப்பரசர் கூறினுர்.

ஆனுல் விவேகமற்ற அரசாட்சி, சமூக நீதியைப் போதியளவு உணராமை, சுயநலமான ஏகபோக உரிமைகள், சோம்பேறித்தனம் ஆகியவற்ருல் ஏற்பட்ட விளைவுகளுக்கு தெய்வத்தைப் பொறுப்பாளியாக்க முடியாதென்ருர் அவர்.

---

## பகோட்டா சற்பிரசாத மகாநாட்டில் 6-வது சின்னப்ப பாப்பரசர்

பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பதந்தையின் வருகையால் தென் அமெரிக்கா இன்று பெருமிதம் கொள்கின்றது. தென அமெரிக்க கொலம்பியாதேச பகோட்டாநகரில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சற்பிரசாத மகாநாட்டில் பங்குபெற்றுக் கொள்ள பரி.தந்தை விமானமார்க்கமாக இம்மாதம் 22 ம்திகதி செல்லலாயினுர். அத்தேச அரசாங்கம் மக்களுடன் ஒன்றுசேர்ந்து பாப்பரசருக்கு வரவேற்பளிப்பதில் பெரும் உற்சாகம்காட்டியிருக்கிறது. பரிசுத்ததந்தையை அந்நகரின் பலபாகங்களுக்கும் கொணடு செல்ல ஹெலிகொப்ரர் விமானசேவை ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. அந்நரில் பரிசுத்தபிதா 25 ம்திகதிவரையும் தங்கியிருப்பார். அக்காலத்தில் அங்கே நடைபெற இருக்கும் தென்அமெரிக்க மேற்றிராணிமாரின் கூட்டத்திலும் பங்குபெற பரிசுத்த தந்தை விசேஷ நாட்டமுடையவராக இருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**ஆவணி—1968**

25 ஞா. பரி. ஆவி விழாவுக்குப்பின் 12ஆம் ஞாயிறு [ப]
26 தி. கிழமைப்பூசை [ப]
27 செ. புனித கலசாந்து சூசையப்பர் [வெ]
28 பு. புனித அகுஸ்தினூர் [வெ]
29 வி. புனித ஸ்நாபக அருளப்பர் தலை வெட்டுண்டது [சி]
30 வெ. புனித லீமா ரோசம். [வெ]
31 ச. புனித ரெய்முந்து [வெ]


சத்தியவேத
பாதுகாவலன்

1968-ம் ஆண்டு ஆவணி மீ 24-ந்உ


## புதிய நிருபம்

சமீபத்தில் மனித உயிர்பற்றி பாப்பரசரால் விடுக்கப்பட்ட சுற்றுநிருபம் புதிய விஷயங்களை தையும் கூறுது, திருச்சபையின் பழைமையான போதனைகளையே விரித்துரைப்பதாயிருப்பினும், இன்றைய உலக மக்களின் மனநிலையைப் பார்க்குமிடத்து அவசியமானதொன்றே. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின்பின் கத்தோலிக்க உலகில் ஒரு புரட்சி ஏற்பட்டுவிட்டது. நாளுக்குநாள் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றன. ஓடும் நீரில் ஸ்நானம் செய்பவர்களைப்போல் நாமும் புதுமுறைகளை ஏற்றோம். ஆனால், நீரின் வேகம் சிலரைத் தடுமாறச் செய்வதுபோல் இதனால் இடறல் பட்டவர்களும் உளர். முன்பெல்லாம் மேலிருந்து வரும் போதனைகளை வாய்மூடி மௌனிகளாக ஏற்று வாழ்ந்தவர்கள் இன்று அவற்றை அலசி ஆராயவும் விமர்சனம் செய்யவும் தலைப்பட்டுள்ளனர். முன்பு மக்கள் காதில் விழுந்தது ஒரே கொள்கை. அதாவது திருச்சபையின் அதிகாரபூர்வமான கொள்கை. ஆனால் இன்று அப்படியல்லாது பல்வேறு பேச்சுக்கள், கொள்கைகள் எங்கும் அடிபடுவதால் அதிகார பூர்வமான போதனை எது என்பதைப்பற்றி தீரவிசாரித்து அறியாது தவறான வழியில் செல்வோர் தொகை அதிகரித்து வருகிறது. இவ்விதம் ஐயத்துக்கிடமான விஷயங்களுள் குடும்பக் கட்டுப்பாடு முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. பிறமதத்தினரராலும், பல அரசாங்கங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இவ்விஷயத்தைப்பற்றிக் கத்தோலிக்க திருச்சபை யாது கருதுகிறதென பாப்பரசர் தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறிவிட்டார். ஆகவே இனி தவறான வழியில் செல்பவர்கள் யாரும் அறியாமையினால் அவ்வாறு செய்கிறவர்களாயிருக்க முடியாது.

கருத்தடைபற்றிய எதிர்மறையான கருத்தை மட்டுமல்லாது, குடும்பவாழ்க்கை, அதன்கடமைகள், பொறுப்புக்கள் ஆகியவற்றையும்பற்றி வற்புறுத்தும் இந்நிருபம் பலருக்கு வியப்பை அளித்திருக்கலாம். ஏனெனில் ஒருவிஷயம் விசேஷ பரிசீலனைக்கு எடுக்கப்படும்பொழுது அதைப்பற்றி பலவிதமான அபிப்பிராயங்களும் நிலவுவது வழக்கம். தமது பிரச்சினைகளுக்கு முடிவு காண பாப்பரசரிடமிருந்து வேறு விதமான தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பல மக்களுக்கு இது கசப்பாக இருக்குமென்பதை அவரே உணர்வார். சனப்பெருக்கத்தால் உலகம் படும் பாட்டை அவர் உணராதவரல்லர். இவ்விஷயம் ஒரு விசேஷ குழுவொன்றினாலே தீர்க்கமாக ஆராயப்பட்டதுமல்லாமல் பரிசுத்த தந்தை தாமே இதைப்பற்றி ஆழ்ந்த பரிசீலனை செய்ததோடு தேவசித்தத்தை அறியுமாறு நீண்டகாலம் செபம்செய்த பின்னரே இந்நிருபத்தை வரையச் சித்தம்கொண்டார். அவர் காட்டும்வழி கஷ்டமானது என்பது உண்மை. ஆனால் இதைவிடச் சுலபமான வழி ஒன்று இருந்தால் அதை அவர் காட்டியிருப்பார். இந்நிருபத்தின் வழியாக பரிசுத்த ஆவியானவரின் சித்தத்தை அறிந்துகொண்டோம். அதற்கு எதிர்வாக்கு இல்லை. நிருபத்தின் கற்பனைகளை பணிந்தமனதுடன் ஏற்றுக்கொள்வ பதே எம்கடன்.

**துணைமேற்றிராணிமார்களுக்கு**

## குறிக்கப்பட்ட விசேஷ வேலைகள்

கொழும்பு அதிமேற்றிராணியாராகிய கருதினால்கூறே அவர்கள் அண்மையில் விடுத்துள்ள அறிக்கையில் தமது துணைமேற்றிராணிமார்களைப்பற்றி குறிப்பிட்டிருக்கின்றார். இதுவரையும் சென்ற சிலவருடங்களாகத் தமக்குத் துணைமேற்றிராணியாராக அரும்பெரும் சேவைகள் ஆற்றிவந்த மார்க்கஸ் பர்ணாந்து அடிகளாருக்கு நன்றிகூறி அவரது புதியவேலையிலும் தேவன் ஆசீர்வதிக்குமாறு மக்களைப் பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன்பின் தமக்குத் தேவனால் துணைவர்களாக அளிக்கப்பட்ட துணை ஆயர் எட்மண்ட் பர்ணாந்து அடிகளையும், ஒஸ்வல்ட் கோமஸ் அடிகளையும் பற்றிக் கூறுகையில் அவர்கள் செய்யப்போகும் விசேஷ வேலைகளைக் குறிப்பிட்டார். களனிஆற்றுக்கு வடக்கே உள்ள கொழும்புமேற்றிராசனப்பகுதியின் பொதுக்கண்காணிப்பு எட்மண்ட் பர்ணாந்து அடிகளாரிடமும், களனியாற்றுக்குத் தெற்கே உள்ள பகுதிகள் ஒஸ்வல்ட் கோமஸ் அடிகளாரிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. மேலும் மேற்றிராசன பரிபாலன வேலைக்குறிப்புகள்பல வற்றைப்பற்றியும் கூறியிருக்கின்றார்.

## இத்தாலிய மேற்றிராணிமார் தடை விதிக்கின்றார்கள்

பகிரங்க இடங்களில் குருமார், சந்நியாசிகள், கன்னியர்கள் நின்று போபவர் வருபவர்களிடம் தானம்கேட்பதை இத்தாலிய மேற்றிராணிமார் தடுத்து ஓர் அறிக்கை வெளிப்படுத்தியிருக்கின்றனர். கடைப்பக்கங்கள், கோவில்முற்றங்கள், துறைமுகப்பக்கங்கள், புகையிரதஸ்தானங்கள், வெற்றிடங்கள் முதலியனவற்றில் நின்று குருமார், சந்நியாசிகள், கன்னியர்கள் பொதுநன்மையான விஷயங்களுக்காயினும், எக்காரணம் பற்றியும் பகிரங்கமாகயாசித்தல் தவிர்க்கப்பட்டிருக்கின்றது. பொதுசனங்களுக்கு இதனால்ஏற்படும்கூச்சத்தை நீக்கவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

## கர்ப்பத்தடைபற்றிய பாப்பரசரின் பிரகடனத்தைச் சார்ந்த தகுந்த குறிப்புகள்

■ சரியான வழி எதுவெனக்காண உலகம் முழுவதும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த முடிவு.
— பிறேசில் அதிமேற்றிராணியார் கமாறியா,

■ பாப்பரசரின் தீர்ப்பு சிலருக்கு மனவாட்டத்தைக் கொடுத்தபொழுதிலும், வேறுபேச்சில்லாது கத்தோலிக்க மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.
— ஒன்ராறியோ ஆயர் காடினர்,

■ வத்திக்கான் தன்முடிவைக் கொடுத்துவிட்டது. அதன்பின் பேச்சுக்கு இடமில்லை.
— அமெரிக்க கருதினால் குஷிங்,

■ கடுமையான ஒரு வேலையைப் பாப்பரசர் செய்து முடித்துவிட்டார். அவரது ஒப்பற்ற நேர்மையை மெச்சுகின்றோம்.
— லீட்ஸ் ஆயர் வீலா.

■ பாப்பரசர் தம்முடிவைக் கொடுத்துவிட்டார். மக்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள்.
— தென்அமெரிக்க கருதினால் மைக்கான்,

■ திருச்சபையின் போதனையை மீளவும் திட்டவட்டமாகக் கூறும் பிரகடனம்.
— டப்ளின் அதிமேற்றிராணியார் மகவல்ட்,

■ சரியெனத் தான் காண்பதை, தம் மந்தைகளுட் சிலருக்குப் பிடியாவிடினும், எவ்வாறு பாப்பரசர் கூறுதுவிடமுடியும்.
— இங்கிலாந்து கருதினால் ஹீனன்,

**தூயஆவிவருகை 12-ம் ஞாயிறு**

## திருச்செய்தி

[ லூக். 10: 23—30 ]

### 'நீயும் போய் அவ்வாறேசெய்'

யேசு பிரான் முன்னோர்நாள் யெருசலேம் ஆலயத்தில்
பாசமுடன் போதித்துப் புதுவிளக்கங் கூறுகையில்
சட்டமறிந்தோனும் சாஸ்திரியுந் தானெழுந்து
துட்ட மனத்தோடு குற்றஞ் சுமத்துதற்காய்—
உற்றதறிவதற்கு உத்தமனார் யேசுவிடம்
பற்றுள்ளான் போலே பதிலிறுக்கக் கோரிநின்றான்;
போதகரே! வாழ்வுபெறப் புதுவழிதான் யாதாமோ?
ஆதரவா யரும்பதில்தான் அருளுமெனக் கேட்டுநின்றான்.

**யேசுபிரான் நீதிசாஸ்திரியை நோக்கி:**

நீயறிய முன்வேத ஆகமந்தான் சொல்வதென்ன?
ஆய்ந்தறிந்து பார்த்து அதன்வழியே நடவென்றார்.

**சட்டவல்லுநன் யேசுவைப் பார்த்து:**

ஆகமத்திற் கூறியதை அப்படியே கூறுகிறேன்
ஏகபரன் கர்த்தாவை உன்இதய ஆன்மாவின்
முழுஉரிமைத் தத்துவத்தால் முன்னுக நேசிப்பாய்
அயலவனை உன்னைப்போல் நேசிப்பாய்—என்றுரைத்தான்.

**யேசுபிரான் சட்டநிபுணனுக்கு:**

நல்ல பதிலிறுத்தாய் நன்று நன்று ஆகமத்திற்
சொல்லியது போலே செய்திடுவா யென்றுரைத்தார்.

**சட்டநிபுணன்:**

அயராது போதிக்கும் ஐயரே! இங்கெனது
அயலான எவனோ? அறியவே அருளு மென்றான்.

**யேசுபிரான் உவமையாகச் சொல்லியது:**

எருசலே மிருந்து எரிக்கோ வுக்கு
ஒருவன் சென்றான் தனிவழி யாக
கண்டனர் கள்வர் கடுகியே சென்று
புண்பட அடித்துப் பூமியிற் கிடத்தி
உடைகள் பொருள்கள் உளதெலாங் கவர்ந்து
ஊறு படுத்திக் குறையுயிராகப்
பாதை யோரம் போட்டுச் சென்றனர்.
குரவர் ஒருவர் அவ்வழி வந்தார்
பார்த்தே சென்றார் பரிவே யின்றி;
குருப் பணியாளன் லேவியும் வந்தான்
அவனைப் பார்த்தான் அகன்றே சென்றான்.
எளியோ னொருவன் சமாரித் தானே
கழுதை மீது பயணம் வந்தான்
கண்டான் இறங்கிக் காயங் கட்டித்
தூக்கி யேற்றித் தூரத் துள்ள
சத்திரஞ் சேர்த்துப் பராமரித் தானே.
இந்த மூவரில் எவனவன் அயலான்
எனறே வினவினார் யேசு பெருமான்.
நன்றே 'இரக்கங் காட்டினோன்'?—என்றான்.

**யேசுநாதர்:**

நன்றே யுரைத்தாய் நவின்றது போன்றே
எந்நாளும் நடந்து உய்ந்திடு வென்றார்.

— ஆசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை யேசுவே இடைநிலையாளராய் இருக்க மரியாளை ஏன் நாம் நாடவேண்டும்?

"இறைவன் ஒருவரே! இறைவனுக்கும், மனிதருக்கும் இடைநிலையாளர் ஒருவரே; இவரே மனிதனான யேசுக் கிறீஸ்துநாதர். இவர் எல்லோருக்கும் தம்மைத்தாமே உய்வாக ஒப்புக்கொடுத்தார்" [திமோ. 2: 5—6] என்று புனித சின்னப்பர் பொலிவாகப் பொறித்திருக்கும்போது, நாம் ஏன் தேவதாயின் உதவியை நாடவேண்டுமென்று பலர் புலம்பிக் கேட்கின்றனர், நிற்க, மரியாளின் உதவியை நாடுவதால் கிறிஸ்துவின் இடைநிலையாளர் உரிமைக்குப் பங்கம் வருவிக்கிறோம் என்றும், அதனால் அவருடைய இடைநிலையாளர் தன்மை மங்கி மறைகின்றது என்றும் முறையிடுகின்றனர்.

திருச்சபைபற்றிய மறைக்கொள்கைத் திரட்டில், 8ஆம் அதிகாரத்தில் 'தூய கன்னியும் திருச்சபையும்' எனும் பகுதியைப் புரட்டி அலசி ஆராய்ந்து பார்த்தால் மேற்கூறிய முறையீடுகளுக்கு நாம் ஆளாகவில்லை என்பது தெற்றெனத் தெரியும். மக்கள்பால் மரியாள் கொண்டுள்ள தாய்க்குரிய பணியால் கிறிஸ்துவின் இந்த இணையற்ற இடைநிலையாளர்பணி சற்றேனும் மங்குவதுமில்லை, குறைவதுமில்லை; மாறாக அதன் ஆற்றல் இதன்வழியாக வெளிப்படுகிறது. ஏனெனில், "மக்கள்பால் தூயகன்னி கொண்டுள்ள மீட்பளிக்கும் செல்வாக்கு அனைத்தும் உள்ளார்ந்த கட்டாயத்தாலன்றி, இறைவனின் விருப்பத்தினாலே உருவாகின்றது. கிறிஸ்துவினுடைய பேறுபலன்களின் நிறைவுப் பெருக்கத்தினின்று வழிகின்றது; அவரது இடைநிலையாளர் பணியை அடித்தளமாகக் கொண்டுள்ளது; முற்றிலும் அதைச் சார்ந்தே இருக்கின்றது; அதிலிருந்தே தன் முழு ஆற்றலையும் பெறுகின்றது" (எண். 60) என்று எடுத்துரைக்கிறது கொள்கைத்திரட்டு.

அதனால் நாம் தேவதாயை நாடும்போது தேவதாய் இறைவனுக்கு ஈடானவள், ஒத்தவள், சரிசமமானவள் என்றும், அடையும் அருட்கொடைகள் எல்லாம் அவளிடமிருந்தே இயங்கி வருகின்றன என்றும் கருதி நாடுவதில்லை. மாறாக அவள் நம்மைப்போல் படைக்கப்பட்டவள், நம்மைப்போல் மீட்கப்பட்டவள், ஆனால் உன்னத முறையில் கருவிலே மாசணுகா மகவாக மீட்கப்பட்டவள். இதைத்தான் அவளது 'அமல உற்பவம்' என்று போற்றிப் பாராட்டுகின்றோம். சிறப்பான முறையில் அவளின் அரிய உதவியை நாடுவதற்குக் காரணம், அவளை இறைவன் தம் தாயாகவும், அகில உலகமீட்பில் தனிப்பட்ட முறையில் உழைக்கவும், கல்வாரியில் மீட்கப்பட்ட மக்கள் சமுதாயத்தின் மாதாவாகவும் தேர்ந்தெடுத்து நியமிக்கப்பட்டதால்தான்.

"பின்னும் எந்தப் படைப்பையும் மனுவுருவெடுத்த வார்த்தையானவருக்கு நிகராக ஒருபோதும் கருதமுடியாது." யேசு இறைவன் தவிர மற்றும் எல்லாம் அவர்தம் படைப்பு. இருப்பினும் தம் திருவுளத்திற்கு ஒத்தவாறு தாம் ஆற்றவேண்டிய அலுவலுக்குத் தம் படைப்புகளைப் பயன்படுத்திக் கொள்வது இறைத்தன்மைக்கு இழிவாகுமா? முரணாகுமா?

அதனால் இறைவன் யேசு, மரியாளை, தம் அரியபடைப்புகளில் ஒருத்தியைத் தமது தாயாகவும், மீட்புவேலையில் விரும்பிய துணையாகவும் மீட்ட மானிடருக்கு மாதாவாகவும் தெரிந்தெடுத்துக்கொண்டார். எப்படிக் கிறிஸ்துவின் குருத்துவமே உன்னத ஒப்பற்ற ஓர் குருத்துவமாய் இருந்தும், திருப்பணியாளரும் விசுவாசிகளும் அக்கிறிஸ்துவின் குருத்துவத்தில் பலவகைகளில் பங்கடையச் செய்கின்றாரோ, அப்படியே கிறிஸ்துவின் ஒரே இடைநிலையாளர் பணியில் பிற படைப்புக்களிடையேயுள்ள வெவ்வேறான ஒத்துழைப்புக்களைப் பயன்படுத்துகிறார் இவைகளினால் அவருடைய குருத்துவமும், இடைநிலையாளர் தன்மையும் கொஞ்சமும் மங்குவதுமில்லை, மறைவதுமில்லை; மாறாக மாண்புற்று மிளிர்கின்றன.

மரியாளின் உதவியை நாடுவதினால் கிறிஸ்துவுடன் விசுவாசிகள் கொண்டிருக்கும் நேர்முகஒன்றிப்பைத் தடுப்பதில்லையா என்று சிலர் நலிகின்றனர். கொள்கைத்திரட்டின் அதேபத்தியின் இறுதியில் பொதுச்சங்கத் தந்தையர்கள் இதற்குப் பதில் பகர்கின்றார்கள்.

"கிறிஸ்துவுடன் விசுவாசிகள்கொண்டுள்ள நேர்முக ஒன்றிப்பை இச்செல்வாக்கு எவ்வகையிலும் தடுப்பதில்லை; மாறாக அதைப் போற்றி வளர்க்கின்றது."

மரியாளே மீட்பின் காரணமாகவும், அருட்கொடைகளுக்கெல்லாம் ஊற்றாகவும், அவளே இறைத்தன்மை யுடையவளாகவும், அவளே மன்பதையின் ஒரே கதியாகவும் கொண்டு அவள் உதவியை நாடினால் அது போழ்து நாம் 'கிறிஸ்துவுடன் விசுவாசிகள் கொண்டுள்ள நேர்முக ஒன்றிப்பைத் தடுப்பது மட்டுமில்லை' இறைவனே இல்லைஎன்பது போலாகும்.

மாறாக மீட்பராகிய யேசு மரியாளைத் தம் பேறுபலன்களால் சிறந்த முறையில் மீட்டுத் தனக்குத் தாயாகவும், அருட்கொடைகளையெல்லாம் அவரிடமிருந்து பெற்றுத்தரும் வாய்க்காலாகவும், மன்பதையைமீட்கும் அலுவலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவள் தன் முழு உள்ளத்தோடும் பனமகிழ்வோடும் ஒத்துழைத்ததனாலும்; யேசு வீடாகவும், மரியாள் அதற்கு வழிகாட்டியாகவும், யேசு இலட்சியமாகவும் மரியாள் அந்த இலட்சியத்தை அடையும் துணையாகவும் இறைவன் யேசுவே தெரிந்துகொண்டார் என்றால், கிறிஸ்துவுடன் விசுவாசிகள் கொண்டுள்ள நேர்முக ஒன்றிப்பை எவ்வகையிலும் தடுப்பதற்குமாறாகப் பலவகையிலும் அதைப் போற்றிவளர்க்கின்றது. இதுவே அமல அன்னையின்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# ஆசிரியரே நீவிர் சிற்பிகள்

ஆசிரியத்தொழில் மகத்தான தொழில். இறைவனின் இளஞ்செல்வங்களைப் பயிற்றும் பெரும் பொறுப்பல்லவா அது. ஆசிரியர்களே நீங்கள் ஆண்டவனால் விசேஷமாக அழைக்கப்பட்டவர்கள்.

வண. குரவர் ஜேம்ஸ் கெல்லர் தரும் ஓர் அருமையான நிகழ்ச்சியை ஆசிரியர்களின் முன் கொண்டுவருவோம் "எடி என்ற பத்தே வயது நிரம்பிய இளைஞன், நான்காம் வகுப்பில் படிக்கிறான். அவனது ஆசிரியர் ஒருநாள், "எடி! நீ ஒருநாளைக்குப் பெரியஎழுத்தாளனவாய், நீ எழுதும் முதல் புத்தகத்தின் முதல் பிரதியை எனக்குத் தருவாயா?" இதுதான் அவர் கூறிய வார்த்தைகள். இளைஞனுக்கு ஆசிரியரின் வார்த்தையின் உண்மை அவ்வளவாகப் புரியவில்லை. ஆனாலும் இந்த வார்த்தையை அன்றுதொடங்கி அடிக்கடி சிந்தித்தான். பதினைந்து வருடங்களுக்குப்பிறகு தான் எழுதிய அழகான நூலொன்றைத் தன் நான்காம் வகுப்பு ஆசிரியருக்கு அளித்தான். ஆம் 'எடி' எழுத்தாளனாகிவிட்டான்!

எடியிடம் மறைந்துகிடந்த மகத்தான ஆற்றலை அந்த ஆசிரியர் கண்டார். தான் ஓர் எழுத்தாளனாகும் ஆற்றல் இல்லாதபோதும் தனது மாணவனிடம் அது இருப்பதைக்கண்டு அளவிலா மகிழ்ச்சிகொண்டார் ஆசிரியர். பத்துவயதிலே அவர் விதைத்த அந்த விதை இளைஞனின் இருபத்திஐந்தாவது வயதில் கனிதந்துவிட்டது! இவ்வாறு இளைஞர்களிடம் எத்தனை எத்தனை ஆற்றல்கள்தான் ஒளிந்துகிடக்கின்றனவோ! அவற்றையெல்லாம் வெளிக்கொணர்வது ஆசிரியர்களின் பொறுப்பல்லவா?

கற்பாறையைக்கண்டு வியப்பவர் யாரும் உண்டா? அதன் அழகைக் கண்டு அதிசயித்து, தன் சூழலைமறந்து வியந்து நிற்பவர் உண்டா? இல்லவே இல்லை. ஆனால் கல்லிலே வடித்த சிலையைக்கண்டு, அதன் அழகிலே மயங்கி வைத்த கண்வாங்காது பார்ப்போர் அநேகர். கலையுள்ளம்படைத்த சிலர் தம்மையே மறந்து நிற்பதும் உண்டு. என்ன வித்தியாசம்? இரண்டும் தன் 'கல்' தன்மையை இழக்கவில்லை. ஆனால் கல்லுக்கு உடல் சமைத்து உயிர் அளித்துவிட்டான் சிற்பி. சிற்பி கற்பாறையைக் காணவில்லை. அதிலே உயிருள்ள கலை ஓவியத்தைக் கண்டான். பலநாள் பாடுபட்டான். உணவையும் உறக்கத்தையும் மறந்து பாடுபட்டான். ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாழும் சிலையைச் செதுக்கிவிட்டான்!

ஆசிரியர்களும் சிற்பிகளே. ஒவ்வோர் இளைஞனும் இறைவனின் ஒரு தனிச் சிருஷ்டி. அவர்களுக்குள்ளே, உலகத்துக்குப் பயன்படும் எத்தனை எத்தனை ஆற்றல்கள் ஒளிந்துகிடக்கின்றன. அவர்களின் ஆற்றல்கள் தொழிற்படுமாறு செய்யவேண்டியது ஆசிரியர்களின் கடமை. ஆனால் ஆசிரியர்களே! கவனம்... எந்த ஓர் ஆற்றல் தடைப்படுத்தப்படுகின்றதோ அது ஏனைய ஆற்றல்களையும் பாதிக்கும் என்ற உளநூல் உண்மையை மறந்துவிடாதீர்கள். ஓர் இளைஞனின் எல்லா ஆற்றல்களும் ஒருங்கே தொழிற்படுமாறு செய்ய வேண்டும்.

முத்து கடலில் கிடப்பதால் பயனில்லை. அதை வெளிக்கொணர்ந்து சுத்தஞ்செய்து பிறருக்குப் பயன்படுமாறு செய்யும்போதுதான் முத்து விலையுள்ளதாகிறது. அவ்வாறே இளைஞர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அதை வளர்க்கும்படி செய்யும் போதுதான் அதனால் உலகத்துக்கு நன்மையுண்டு. உயிருள்ள அலங்காரச் சிலைகளைப் படைக்கும் ஆசிரியர்களின் பணிதான் என்னே!


— Bro. S. A. I. Matthew, S. S. J.

## இதயங் கவர்ந்த

இதயங் கவர்ந்தாள் எழிலரசி
என்னுட் கலந்தாள் மெய்ம்மறந்தேன்
நிதமும் நினைவில் நீங்காத
நிலவாய் நிலவும் இவள்யாரோ ?

உலகச் சிலையின் ஒளிச்சிற்பி
உளியைக் கையிற் றெடுமுன்பே
கலைஞன் கனவில் உருவானுள்
கன்னி யுலகின் முதலானுள்.

என்னைப் பெற்ருள் இதயத்தில்
இவளே பெற்ருள் உதரத்தில்
அன்னை பிரசவ வேதனையோ
அந்தோ கோரச் சிலுவையது.



"இது என் உடலம், உதிரம்" என
எழுவான் படுவான் எல்லைவரை
நிதமும் குரவோர் நிகழ்த்திவரும்
நிகரில்லாத திருப்பலியின்

பொருளாய்ச் சிலுவைப்பலி நினைவாய்ப்
பொழியுங் கருணைப் பூரணற்கு
அருளாய் நிறையும் "மனுஷீகம்"
அளித்த ஆதிக்குரு அவளே.

வார்த்தையான தெய்வமகன்
வனப்பை வடிக்கும் என்பேனு
வார்த்தை ஒளியின் வழியேக
வரத்தைப் பெருக்கும் வனிதையவள்.

ஞாலம் சிவந்து அபாயத்தால்
நடுங்கிக் கலங்கும் துயர்நடுவே
நீலம் பூத்த நம்பிக்கை
நிறமாய் ஒளிரும் நிலவுமவள்.

எந்தன் சிந்தனை முந்திரிகை
இரசம் வற்றிக் காய்ந்துலர
அந்தக் "கானுப் புதுமை" யென
அருந்தேன் சொரியும் அன்னையவள்.

"யாழ்-ஜெயம்"

எழிலரசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் விருந்து

**அன்புத் தம்பி - தங்கையருக்கு வணக்கம்!**

அர்ச். லெயோனிதாஸ் கி. பி. 204-ம் ஆண்டில் வசித்தவர். செவேருஸ் சக்கரவர்த்தியின் ஆட்சியில் வேதத்துக்காக உயிரைக் கொடுத்தவர். லெயோனிதாஸின் மகன் பெயர் ஒரிஜென். ஒரிஜென் சிறுவனுய்ப் படுக்கையில் உறங்குகையில் லெயோனிதாஸ் அடிக்கடி குனிந்து சிறுவனின் மார்பில் முத்தமிடுவார். இதைப் பலகாலும் அவதானித்தபலர் அதன் காரணத்தை அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர்: "என்மகனுடையஉடல் பரிசுத்த ஆவியின் ஆலயம்" எனப் பதிலளிப்பார். அப்படியானுல் உங்கள் உடல்?

— அண்ணு

# நினைவின் அலைகள்

எழுதியது: மைக்கல் தோமஸ் (வயது 15)

பொழுது புலர்ந்தது; ராஜசேகரன், சோம்பல் முறித்துக்கொண்டே விழித்துக்கொண்டான். கால்களை நீட்டிக்கொண்டே மணியைப் பார்த்தான் ஆறுமணி; இன்னும் ஒருமணி நேரத்தில் பள்ளிக்குப் போகவேண்டும். சிறிய அறையாக விருந்த போதிலும், நல்ல காற்ருேட்டம் மிக்க அறை. மேசையில் சில புத்தகங்கள் அடுக்கப்பட்டு இருந்தன. அறையைச்சுற்றி ஒரு நோட்டம் விட்டான். அவனது, இரண்டொரு ஆடைகள் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஆணியில் தொங்கிக்கொண்டிருந்தன. கட்டிலுக்கு முன்பு, ஒரு பழங்காலத்துப் புகைப்படம்!

புகைப்படத்தில், ஏறக்குறைய முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு மனிதரும், அதற்கடுத்து ஒரு இளம்பெண்ணும், இருவருக்கும் நடுவே ஒரு சிறுவனும் காணப்பட்டார்கள். 'சிறுவன் ராஜசேகரனு?' என்று கேட்கத்தேவையில்லை!

படத்தைக்கண்டதும் ராஜசேகரனின் மனதில் பல பழைய நினைவுகள் வந்து சூழலாயின. நினைவின் அலைகள்வந்து மோதிப்புரலலாயின.

இருபது வருடங்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட படம் அது! அப்போது ராஜசேகரனுக்கு ஐந்துவயதுதான் இருக்கும். அவனுடைய தந்தை சுப்பிரமணியப்பிள்ளை நல்ல உத்தியோகத்திலிருந்தார். ராஜசேகரன், அப்போதெல்லாம், —சீருடனும்,—சிறப்புடனும் வளர்க்கப்பட்டான். அவன் பிறந்து எட்டுவருடங்கள்தான் ஆகியிருக்கும். சுப்பிரமணியப்பிள்ளை ஏதோ காரணத்தால் உத்தியோகத்தை இழந்தார்.

அதினின்று அவர்கள் வாழ்க்கையின் நடுவே, கரியமேகங்கள்வந்து சூழ்ந்துகொண்டன. சுப்பிரமணியப்பிள்ளை எவ்வளவோ தேடியும் பலன் கிட்டவில்லை. வாழ்க்கையைச் செத்லுதுவது பெரும் சிரமமாயிற்று. சில மாதங்களில், ராஜசேகரனின் தாயும், காசநோயால் பாதிக்கப்பட்டு இறந்தாள். இவ்வளவுகாலமும், இலவசக்கல்வி பயின்றுவந்த ராஜசேகரனை சுப்பிரமணியப்பிள்ளை வீட்டிலேயே நிறுத்திக்கொண்டார். கூலிவேலை செய்தும், மற்றும் பல சிறு, சிறு வேலைகளைச்செய்தும், காலந்தள்ளினுர்; ஒரு நாளைக்கு எப்படியாவது இரண்டு ரூபாயாவது, தேடிக்கொள்வார். ஆனுல், அதில் அரைவாசிக்கு நன்ருகக் குடித்துவிட்டு, மிகுதிப் பணத்திற்கு ஏதாவது வாங்கிக்கொண்டு வீடுசேர்வார். குடிப்பழக்கம் அவருக்கொரு புதுப்பழக்கம்; இப்போது குடியின்றி அவரால் இருக்கவே முடியாது.

ராஜசேகரனுக்குப் பத்துவயது நிரம்பியது! ஒருநாள் காலை, சுப்பிரமணியப்பிள்ளை வழக்கம்போலப் போய்விட்டார். ராஜசேகரன் ஏதோ சமையல் செய்துகொண்டிருந்தான். மழை பயங்கரமாகப் பெய்துகொண்டிருந்தது. அத்துடன்பேய்க்காற்றும் சேர்ந்து, அவன் மனதில் ஏதோ ஒரு பயங்கரமான உணர்ச்சி, — என்றுமில்லாத உணர்ச்சி, அவன் மனதில் குடிகொள்ள அவன் போய்ப்படுத்துக்கொண்டான்.

* * *

திடுக்கிட்டெழுந்தான் ராஜசேகரன்! எழுந்து பார்த்த போது, அவன் பக்கத்தில் இரண்டு போலீஸ்காரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். ராஜசேகரன், எழுந்து அவர்களிடம் உளறி, உளறி ஏதோ பல கேள்விகளைக் கேட்டான். அப்போதே குடிசைக்குமுன் ஒரு ஜீப்வண்டி வந்துநிற்க, அதினின்று ஒரு இன்ஸ்பெக்டர் இறங்கினுர். ராஜசேகரனிடம் வந்து, "சுப்பிரமணியப்பிள்ளை உனது அப்பாவா?", எனப்பரிவுடன் கேட்டார். "ஆமாங்க ஐயா!", எனப்பயம் தொனித்த குரலில் பதிலளித்தான் ராஜசேகரன். "அவருக்குச்சுகமில்லாமல் ஆஸ்பத்திரியில் இருக்கிருர்.—அவர் வருகிறவரைக்கும் வந்து என்னேடு இரு. பின்பு, அவர் வந்ததும் போகலாம்," என்ருர் இன்ஸ்பெக்டர். ராஜசேகரன் சிறுவனுக இருந்தபோதிலும், இன்ஸ்பெக்டர் கூறுவது உண்மையாகத் தோன்றவில்லை அவனுக்கு. ஆனுல், உடனே இன்ஸ்பெக்டருடன் புறப்பட்டு விட்டான். போகும் வழியில் அவன், இன்ஸ்பெக்டரிடம், 'ஐயா, அப்பாவுக்கு ஏதாவது வருத்தமா?" எனக்கேட்டான்.—இன்ஸ்பெக்டரோ பதில் கூறவில்லை,

* * *

ராஜசேகரன் ஒரு மாதத்தை இன்ஸ்பெக்டர் வீட்டிலேயே கழித்துவிட்டான். அடிக்கடி, தந்தையைப்பற்றிக் கேட்டபோதெல்லாம், அவர், ஏதோ சாக்குப்போக்குக் கூறி வந்தார். ராஜசேகரனுக்கும் மூளை இருக்கத்தான் செய்தது.—'அப்பா இறந்துவிட்டார்,' என முடிவுக்குவந்தவனுய், ஒருநாள் இன்ஸ்பெக்டரிடம் கேட்டான். "ஐயா, அப்பா இ...இ...இறந்து......விட்டாரா?", 'ஓ', வெனக்கதறிவிட்டான்.— "ஆமாம் தம்பி, ஒரு காரில் அடிபட்டு இறந்துவிட்டார். நான் இவ்வளவு நாளும் இதை உனக்குக் கூறவில்லை. ஆனுல் என்னை உன் சொந்த அப்பாவாகவே நினைத்துக்கொள்!" சோகமும், உணர்ச்சியும் கலந்த குரலில் கூறினுர் இன்ஸ்பெக்டர். அன்றுதொடக்கம், இன்ஸ்பெக்டரின் சொந்த மகனுகவே இருந்து வந்தான் ராஜசேகரன்; இருபது வயதில் சர்வகலாசாலையில் படித்து பட்டமும் பெற்றுவிட்டான்.

இன்ஸ்பெக்டர், இலங்கையை விட்டு சிங்கப்பூருக்குப் போக எண்ணி, ராஜசேகரனையும் வருமாறு எவ்வளவோ வற்புறுத்தினுர். ஆனுல், தா[illegible]டைவிட்டுப்போக,

[நாலாம் கலம் பார்க்கவும்]

# முருங்கைக்காய்

அருந்தமிழ்க் கவிதை பாடுகின்றீர்
ஆராய்ச்சிகளைத் தேடுகின்றீர்
முருங்கைக் காயைப் பற்றியொரு
மொழியும் பேசா திருக்கின்றீர்;

*

என்றே ஒருநாள் முருங்கைக்காய்
என்னைப் பார்த்துக் கேட்டதுவே
தின்றே பார்த்துச் சுவைத்ததினுல்
தேனுய்க் கவிதை பாடுகின்றேன்.

*

மரக்கறி களுக்குள் மணிமகுடம்
மனதைக் கவரும் ஓரமுதம்
முருங்கைக் காய்தான் இதுஉண்மை
முன்னேர் இதனைப் போற்றியுளர்.

*

எல்லாச் சீவ சத்துகளும்
இதன்பா லுளது நோய்களினுல்
புல்லாய் மெலிந்து போனவரைப்
போஷிப் பிக்கும் சஞ்சீவி;

*

முருங்கைக் காயின் லேகியத்தால்
முற்ருய் இழந்த வீரியத்தைத்
திரும்பப் பெறலாம் இரும்பைப்
போல்
திடனும் பலமும் பெற்றிடலாம்;

*

மரக்கறி வகையில் முருங்கைக்காய்
மன்னன் எனவே அறிந்திடுவீர்
உருக்கும் கணைநோய் உள்ளவர்கள்
உடலைக் காக்கும் ஒருமூலி.

*

இலையும், பூவும், பிஞ்சுகளும்
இந்த மரத்தின் பட்டைகளும்
விலையில்லாத திரவியமாம்
விரும்பிப் போற்றிக் காத்திடுவீர்;

*

என்றே வைத்திய வாகடத்தை
இயம்பிப் போந்தார் அகத்தியனுர்
இன்றே முருங்கை தனைவளர்ப்பீர்
ஈடில்லர்த பயன் பெறுவீர்;

— எம்வி.

## நகைச் சுவை

டக்றர்: (சப்பாத்துத் திருத்துகிறவனைப் பார்த்து) இந்தச் சப்பாத்துகளை ஒருகால் பார்வையிட்டு இவற்றைத் திருத்தவேண்டுமா என்று சொல்;

சப்பாத்துத் திருத்துவோன் — (அவற்றைக் கவனமாகப் பார்த்துவிட்டு) இவற்றிலே திருத்தவேண்டியது ஒன்றுமில்லை; ஏன்ஐயா வீணுகப் பணத்தைச் செலவிடவேண்டும்.

டக்றர்: சரிதான் மெத்தப்பெரிய உபகாரம். போய் வருகிறேன்.

சப்பாத்துத் திருத்துவோன் — அவர் திரும்பிச்செல்ல ஆயத்தமானதும் ஐயா, தயவுசெய்து ஐம்பது சதம் கொடுங்கள்.

டக்றர்: ஐம்பதுசதமா? எதற்காக? நீ ஒன்றும் செய்யவில்லையே. கேலிபண்ணுகிருயா?

சப்பாத்துத் திருத்துவோன் — ஐயா, அன்று நீங்களும் ஒன்றும் செய்யவில்லையே. நீங்கள் என்னைச் சோதித்துவிட்டு அப்படி உனக்கு ஒன்றுமில்லையென்று சொல்லிவிட்டு ஐந்துடலர் சலாராகக் கேட்கவில்லையா?

* * *

ஆசிரியர்: ஜேம்ஸ் உனக்கு வயதென்ன?

மாணவன்: பன்னிரண்டு.

ஆசிரியர்: அப்படியானுல் நீ உன்னைக் குறித்து வெட்கப்பட வேண்டும். ஏன் தெரியுமா?

மாணவன்: தெரியாது சார்.

ஆசிரியர்: நெப்போலியன் உன் வயதில் கற்கும் போது வகுப்பில் முதலிடத்தில் இருந்தார்.

மாணவன்: அப்படியா! இப்பொழுது நீங்கள்தான் என்னைவிட அதிகமாக வெட்கப்பட வேண்டும். நெப்போலியன் உங்கள் வயதில் சக்கரவர்த்தியாக இருந்தார்.

ம. எலிசபேத் அவர்களின்

## 15-ம் வருட மரணநினைவு

**மறைவு: 25-8-1953**

இவவின் ஆன்மசாந்திக்காக புலோலி, அர்ச். சூசையப்பர் தேவாலயத்தில் இம்மாதம் 25-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை ஒரு துக்கப்பூசை நிறைவேறும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சங் சந்நியாசர், கன்னியர் மற்றும் இனசன சிநேகிதர் அனைவரும் இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்ருடும்படி கேட்டுக் கொள்ளுகிறேம்.

இவவின் ஆத்மா சாந்தியடைவதாக

புலோலி தெற்கு 117-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**M. B. 9128**

வட்டுக்கோட்டை மேற்கு
விஸ்வநாதர் தம்பையா— வழக்காளி

எதிராக
நீக்கிலாஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி
1. சின்னக்குட்டி அல்லது சுப்பிரமணியமும், அவர் மனைவி
2. வள்ளியம்மையும்.
இருவரும் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் M. B. 9128ஆம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1968ஆம் ஆண்டு புரட்டாதிமாதம் 27-ந்தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 7,287/ சதம் 10. 3-6-67 தொடக்கம், 9-4-68 வரைக்கும் ரூபா 5,500-க்குப் 12 சதவீதம் வட்டியும், அதன்பின் இறுக்கும் வரை முழுத்தொகைக்கும் 5சதவீதம் வட்டியும், கோட்டுச்செலவு 452 ரூபா 45சதமும். இதில் ரூபா 2,000 (இரண்டாயிரம்) கழித்து.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திரிக் யாழ்ப்பாணப்பகுதி சிவியாதெருஇறை, சுண்டிக்குளி கோயிற்பற்று, "ஈழயன் வளவு" நிலபர. 4-ம், வீடும், குசினியும், கிணறும், வளர்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு— வியாலாட்சி பெண் சுப்பையாவின் ஆதனம். வடக்கு — சுப்பிரமணியம் இராசையாவின் ஆதனம். மேற்கு — யே. எஸ். நீக்கிலாசின் ஆதனம். தெற்கு — ஒழுங்கை.

**ச. அ. மரியாம்பிள்ளை,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

4, சென் ஜேம்ஸ்,
கிழக்குவீதி, யாழ்ப்பாணம்.
124-68

> "மனிதன் ஒருவன்தான் சிரிக்கும் தகுதிபெற்றவன். அதே நேரத்தில் பிறர் பார்த்துச் சிரிக்கத்தக்க நிலையில் உள்ளவனும் அவனே." — Greevile

ராஜசேகரன் மனது விரும்பவில்லை; மறுத்துவிட்டான்!

எனவே, ஒரு பெரியகல்லூரியில் அவனுக்கு உத்தியோகம், பார்த்துக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார் இன்ஸ்பெக்டர். அன்று தொடக்கம் அந்தச்சிறிய அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, நினைவின் அலைகள் அவனைச்சூழ வாழ்ந்துவருகின்ருன் ராஜசேகரன். மணி ஏழாகிவிட்டது!

பள்ளிக்குப்போக தாமதமாகிவிட்டதை உணர்ந்த அவன், உடனே எழுந்தான்! நினைவின் அலைகளைக் களைய முயன்ருன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித வளனார் சபையின் புதிய அதிபர்

புனித வளனார் துறவற சபையின் அதிசிரேஷ்டராக வண. ஞானச்சகோதரர் A. M. தோமாஸ், S. S. J. அவர்கள் 4-8-68 அன்று துறவிகளின் பொதுச்சபையால் தெரிவுசெய்யப்பட்டார்.

இவர் 1919-ம்வருடம் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த நாரந்தனையில் பிறந்தவர். ஊர்காவற்றுறை, புனித அந்தோனியார் கல்லூரியில் இவர் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றபின்னர் இளவாலை புனித ஹென்றிக் கல்லூரியில் சேர்ந்து லண்டன் மெட்ரிக்குலேசன் பரீட்சையில் சித்தியெய்தினார். பின்னர் கலைமாணிப்பட்டத்தேர்வில் முதற் பிரிவில் தேர்ச்சியடைந்தார். 1947-ம் வருடம் கம்பளை புனித சூசையப்பர் கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்ற இவர் 1955-ம் வருடம் முதல் அட்டன் புனித பொஸ்கோ கல்லூரியின் அதிபராகத் தொடர்ந்து கடமையாற்றிவருகிறார்.

இறைவன் அவருக்குத் தமது புதிய பதவியில் எல்லா வெற்றியையும், நலன்களையும் அளிக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்

எஸ். ஏ. ஐ.

## இறை யேசுவே....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அயரா அலுவல் என்றால் அது மிகையாகாது.

இன்றைய நாட்களில் உலகின் எட்டுத் திக்குகளிலும் கோடானுகோடிமக்கள் மாதாவின் மாதத்தையும், மாதாவின் நவநாட்களையும், அவள்தன் திருநாட்களையும் உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும், ஆன்ற ஆர்வத்துடனும் கொண்டாடுகிறார்கள். அப்படிக்கொண்டாடுவதன் நோக்கம் என்ன? அமல அன்னையை இறைவனாக, கதியாகக் கொள்வதற்காகவா? இல்லை, அவள் வழியாக அவர்தம் நேர்முக ஒன்றிப்பை அடைவதற்கே.

மரியாளை நாடாமல் யேசுவிடம் செல்லமுடியாதா? யாரும் செல்லமுடியாதுஎன்று கூறுவதில்லை; ஆனால் இறைவன் யேசுவே மரியாளைத் தம் தாயாகவும், மீட்டமக்களின் தாயாகவும், துணையாகவும் தெரிந்துகொண்டார். அவள்தன் உதவியை நாடிச் செல்வதே இறைவனின் திருவுளம் என்பது திருச்சபை தோன்றியதிலிருந்து இந்நாள்வரை ஆயிரக்கணக்கான மக்கள் அவள் உதவியைநாடி, நாடியதைப் பெற்றதாகப் பாரெல்லாம் பறைசாற்றியிருப்பதிலிருந்து தெற்றெனத் தெளிகிறது.

ஆக, "மக்கள்பால் மரியாள்கொண்டுள்ள தாய்க்குரிய பணியால் கிறிஸ்துவின் இந்த இணையற்ற இடைநிலையாளர்பணி சற்றேனும் மங்குவதுமில்லை, குறைவதுமில்லை; மாறாக அதன் ஆற்றல் இதன்வழியாக வெளிப்படுகிறது."

நிற்க, "கிறிஸ்துவுடன் விசுவாசிகள் கொண்டுள்ள நேர்முக ஒன்றிப்பை இச்செல்வாக்கு எவ்வகையிலும் தடுப்பதில்லை. மாறாக அதைப் போற்றிவளர்க்கின்றது" (திருச்சபைக் கொள்கைத் திரட்டு எண் 60). அதனால், இறை யேசுவின் இடைநிலையாளர் தன்மை மாண்புற்று மிளிரவும், அவருடன் நாம் கொண்டுள்ள நேர்முக ஒன்றிப்பை வளர்க்கும் மரியாயின் பக்தியைப் பாரெங்கும் பரவச்செய்வோம்.

சகோதரர் R. மரியசெல்வம், ச. ச.
பெங்களூர் — 16.

(நன்றி: தோழன்)

"கடின உழைப்பு இல்லையேல் வாழ்க்கையில் நாம் பிரமாதமாக ஒன்றும்சாதித்துவிடமுடியாது"
(அர்ச். ஜெரோம்).

# நைஜீரியா-பயபிரு பிரதேச பரிதாபநிலை

சென்ற பலமாதங்களாகப் பயபிரு பிரதேசம் நைஜீரியாவிலிருந்து பிரிந்துகொண்டுள்ளதாகப் பிரகடனம் செய்துள்ளதால் அங்கே உள்நாட்டுயுத்தம் நாளுக்கு நாள் பலமடைந்துகொண்டே வருகின்றது. அதனால் இருபிரிவுகளும் பலம்குறைந்து வருகின்றன. அங்குள்ள மக்கள் பசியால் வாடுகின்றனர். பயபிருவில் நிலைமை மோசமாயிருந்த பொழுதிலும் அப்பிரிவுத் தலைவர்கள் ஒருபோதும் விட்டுக்கொடுப்பதில்லையெனத் திடமாகப் போர்செய்து வருகின்றனர். பசிப்பிணியாலும், வியாதி நோய்களினாலும் துன்பப்படும்மக்களுக்கு ஆறுதல் அளிக்க சர்வதேச தர்மஸ்தாபனங்கள் முன்வந்தபொழுதிலும் அந்நாட்டில் உதவிகொண்டு செல்லமுடியாது தவிக்கின்றன. அண்மையில் பாப்பரசர் அனுப்பிய தாராளமான உதவியும் மக்களை எட்டமுடியாது இருக்கின்றது. இந்நிலையில் எத்தியோப்பிய சக்கரவர்த்தியின் ஆதரவில் கூடிய ஆபிரிக்க நாடுகளின் சங்கமும் இப்போருக்கு முற்றுப்புள்ளிவைக்கப் பலபிரயத்தனங்களும் செய்கின்றது. இறுதியாகக் கிடைத்த செய்தியின்படி உணவு, மருந்து முதலியன கொடுத்துஉதவ ஒருவகை ஒழுங்குசெய்ய இருபக்கங்களும் சம்மதித்திருப்பதாகத் தோன்றுகிறது.

## பலசபைக் கன்னியாஸ்திரிகளுக்கு ஒரு பொதுமடம்

தைவான் என்று அழைக்கப்படுகிற போர்மோசாதீதில் ஒருநவீன முறையில் இயங்கும் ஒரு கன்னியாஸ்திரிமடம் அண்மையில் திறக்கப்பட்டது. அங்கே "பூ. ஜென்" என்று அழைக்கப்படும் சர்வகலாசாலை இருக்கின்றது. அங்கே பலவகை வேலைகளில் ஈடுபட்டிருக்கும் கன்னியாஸ்திரிகள் இருக்கின்றனர். பல்வேறு சபையினர். இவர்களுட் சிலர் ஆசிரியத் தொழில் செய்கின்றனர்—சிலர் மாணவிகள். சிலர் வைத்திய உதவியாளர்கள். இவ்வாறு பலவகைச் சபைகளுக்குரிய கன்னியாஸ்திரிகள் ஒரு ஸ்தாபனத்தில் வேலைசெய்யவேண்டி இருப்பதால் அவர்களுக்கென ஒரு பொது மடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் யாவரும் அங்கே ஒருமித்து வாழ்ந்துவருகின்றனர். தத்தம்சபையினருக்குரிய செபதபமுறைகளை பிறிதுபிறிதாகவும், மறுபலமுயற்சிகளை கூட்டாகவும் செய்துவருகின்றனர்.

## ஹங்கேரியும் வத்திக்கானும்

ஹங்கேரியதேச கம்யூனிஸ்த அரசாங்கத்திற்கும், பரிசுத்த ஸ்தானத்திற்குமிடையே புதியசமரசப் பேச்சுகள் விரைவில் ஆரம்பமாகுமென அந்நாட்டுப் பெக்ஸ்நகரின சிசெர் ஹற்றி மேற்றிராணியார் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்: 1964ஆம் ஆண்டு ஒருதற்காலிக உடன்படிக்கை நடைபெற்றதிலிருந்து அங்கே திருச்சபைக்கும், அரசாங்கத்துக்குமிடையிலுமுள்ள உறவுகள் புலப்படத்தக்கவகையிலே திருத்தமடைந்திருக்கின்றன. திருச்சபையும், கம்யூனிஸ்த கட்சியுமாகிய இரண்டுமே "அதிகம் படித்திருக்கின்றன." கம்யூனிஸ்தர்கள் இப்பொழுது அதிகமதிகம் சகிப்புத்தன்மை காண்பிக்கிறார்கள். ஆனால், திருச்சபை அதிகசுதந்திரம் வேண்டுகின்றது. ஹங்கேரியிலே திருச்சபையின்நிலைமை திருத்தமடையுமென மேற்றிராணியார் திடநம்பிக்கையாய் இருக்கின்றார்.

## புரொட்டஸ்தாந்தரும் சற்பிரசாத மகாநாடும்

தென்னமெரிக்காவைச்சேர்ந்த கொலம்பியாநாட்டின் தலைப்பட்டணமாகிய பொகோட்ராநகரிலே இந்த ஆவணிமாதம் 18ஆம்திகதியாகிய சென்றஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்ற 39-வது சர்வதேச சற்பிரசாதமகாநாட்டின் அனுகூலத்திற்காக அந்நாட்டிலுள்ள புரோட்டஸ்தாந்த கிறிஸ்தவர்களின் குழுஒன்று செபங்கள் செய்தும், நிதி சேகரித்து வழங்கியும் பேருதவி செய்திருக்கிறது.

பொகொட்ராநகர கிறிஸ்தவ ஐக்கிய சபையாராகிய இந்தக்குழுவினர் புரொட்டஸ்தாந்தர்களின் கூட்டங்களிலே மகாநாடுபற்றிய சொற்பொழிவுகளையும் ஆகரித்து ஒழுங்குசெய்யலாயினர். அவற்றில் முதலாவது சொற்பொழிவு நிகழ்த்தியவர் அங்குள்ள பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானிகராலயத்தின் கணக்குப்பரிசோதகரான மொன்சிஞ்ஞோர் தோமஸ் வைற்சுவாமிகளே. சற்பிரசாதமகாநாட்டினை ஒழுங்குபடுத்திவந்த கமிற்றிக்குக் கிறிஸ்தவ ஐக்கியசபைத் தலைவர்கள் எழுதிய கடிதம் ஒன்றில், மகாநாட்டின் அனுகூலத்திற்காகச் செபக்கூட்டங்கள் நடத்திக்கொண்டு வருவதாகவும், அதற்குப் பொருளதவி செய்யுமுகமாக விசேஷநிதி ஒன்று சேகரித்துவருவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். புரொட்டஸ்தாந்த இல்லங்கள் யாத்திரிகர்கள் தங்குவதற்கு இடவசதிகளும் அளித்துள்ளன.

## அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச் பிரான்சிஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 29-ந்தேதி வியாழக்கிழமை (போயாதினத்துக்கு முன்தினம்) பி. ப. 4மணிக்கு ஆரம்பமாகி நடந்தேறும். அங்கத்தவர் எல்லோருக்கும் நேரகாலத்தோடு சமுகம் கொடுக்குமாறு தயவாய்க்கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

A. S. FRANCIS of MARY
சபைக்கர்த்தருக்காக


ஓர் அரிய சந்தர்ப்பம்!

குறைந்தவிலையில் நிறைந்த பொக்கிஷம்

"புனிதர் பிரான்சிஸ் அசிசியார்"

அரிய வரலாறு தமிழில் முதன் முதலாக வெளியாகின்றது.
400 பக்கங்கள்வரை கொண்ட இனிய சரித்திரம்.

16 அரிய சிறந்த படங்கள், உயர் ரகக் காகிதம்.

சிறிய தொகை மாத்திரம் அச்சிடப்படுகின்றது.
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

ஊர்காவற்றுறையில் நடைபெற இருக்கும்
சற்பிரசாதச் சமாகமத்தை முன்னிட்டு

பிரத்தியேக விலை ரூ. 6-00
பதிவுத் தபாற்செலவு ரூ. 1-00 } 20-9-68க்குமுன், பணம் அனுப்புவோருக்கு மாத்திரம்.
சாதாரண விலை ரூ. 7-50
தபாற் செலவு வேறு

கிடைக்குமிடம்: J. J. Rasiah,
6, St. Mary's Lane,
Kayts.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## புதிய மீன்பிடி துறைமுகம்

தாமதப்பட்டிருந்த மயிலிட்டி மீன்பிடி துறைமுகவேலை திரும்பவும் ஆரம்பமாகியுள்ளது. எஞ்ஜினியரிங் கூட்டுத்தாபனம் நடத்திவரும் இத்தத்துறைமுகவேலை 15லட்சம்ரூபாசெலவிலே இருவருடங்களில் பூர்த்தியாகுமெனத் தெரியவருகிறது. ஐந்துதொன்நிறை கொண்ட 3,000பார்க்கற்களை எடுத்துக்கொள்ள முடியாதுபோயினமையாலே அவற்றிற்குப்பதில் கொங்கிறீற்கற்கள் பாவிக்கப்பட விருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## பஸ்களைச் சுத்தஞ் செய்க

தற்பொழுது பிரயாணசேவையில் ஈடுபட்டுவரும பஸ்களைக் குறைந்தபட்சம் மூன்றுமாதங்களுக்கு ஒருமுறையாவது சுத்தஞ்செய்யும்படியாகப் போக்குவரத்துச்சபைத்தலைவர் சபையின் சகலபிராந்திய நிலையங்களுக்கும் ஒருசுற்றுநிருபத்தின்மூலம் தெரிவித்திருக்கின்றார்.

## பஸ்விபத்து

கேகாலையிலிருந்து கண்டிக்குப் புறப்பட்டுச்சென்ற போக்குவரத்துச்சபைப் பஸ்ஒன்று ஹிங்குல எனுமிடத்திலே எதிர்முகமாகவந்த மண்வாரி இயந்திரம்ஒன்றுக்கு வழிவிலகிக்கொடுத்தபோது ஈரமாயிருந்த புற்தரையில்சறுகிப் பக்கத்திலிருந்த ஓடையில்விழுந்து விபத்துக்குள்ளாகியது. அதனால் அப்பஸ்ஸில் சென்ற பிரயாணிகளில் 60பேர் காயமடைந்தனரென்றும், இவர்களில் படுகாயமடைந்த 20பேர் கண்டி அரசினர் பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப் பட்டனரென்றும தெரியவருகிறது இவர்களில் ஒரு பௌத்தபிக்குவும், ஒருகுழந்தையும அடங்குவார்கள்.

## புதிய கைத்தொழில் நகரம்

கண்டிமாவட்டத்திலே 4,004ஏக்கர் விஸ்தீரணமுள்ள பலெகெல்லைத் தோட்டத்திலே குண்டாசேல்எனும்பெயருடன் ஒருபுதியநகரம் கட்டப்படவிருக்கிறது. வருகிறபுரட்டாசிமாதம் 20ஆம்திகதியன்று பிரதமர்டட்லி சேனநாயக்கா இதனை ஆரம்பித்துவைக்கவிருக்கின்றார். இது ஒருபாரிய கைத்தொழில்நகரமாய், கண்டிநகருக்கு இணையொத்ததாய், ஒருநகருக்குரிய முதல்தரமான ஆஸ்பத்திரி, விமானநிலயம், தபாற்கந்தோர், பாடசாலை, தொழிற்கல்விநிலையம், நூல்நிலையம், விளையாட்டுமைதானம், அரசாங்க காரியாலயங்கள் முதலியவைகளையெல்லாம் கொண்டதாய்விளங்கும்.

## உருவப்படத் திறப்புவிழா

வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. யும், பிரபல சமூகத்தொண்டரும், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபராக 40ஆண்டுகள் கடமையாற்றியவரும், யாழ்ப்பாண நூல்நிலயத்திற்கெனத் தமது மாணசாதனத்தில் 10 000ரூபா ஒதுக்கிவைத்திருந்தவருமான திரு. வி. வீரசிங்கம் ஜே. பி., எம். பி. ஈ. அவர்களின் உருவப்படம் ஒன்று சென்ற14ஆம்திகதியன்று நூல்நிலைய மண்டபத்தில் புதியஆணையாளர் திரு. கே. பேரம்பலம்அவர்களால் திரைநீக்கம் செய்துவைக்கப்படலாயிற்று. இந்தஉருவப்படத்தை இலங்கையின் தலைசிறந்த ஓவியரான கேற்முதலியார் அமரசேகா அவர்கள் வரையலாயினர். பிரமுகர்கள்பலரும் திளாகக்கூடியிருந்த இத்திறப்புவிழாவில் பேராசிரியர் கே. குலரத்தினம் முதலாம் பெரியார்கள் திரு. வீரசிங்கம்அவர்கள் ஆற்றியசேவைகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

## கந்தளாயில் காட்டுத்தீ

கந்தளாயிலே சென்ற15ஆம்திகதி வியாழக்கிழமை அதிகாலை எதிர்பாரா தவிதமாய்க் காட்டுத்தீ பற்றிப்பிடித்து நான்குசதுரமைல் விஸ்தீரணமான பகுதி முழுவதும் பரவலாயிற்று. இந்தத்தீ அங்குள்ள விவசாயப்படை முகாமிலும் பரந்து 80,000ரூபாவரை பெறுமதியான விவசாயஉபகரணங்களைச் சேதப்படுத்தியது. அதுபரவத் தொடங்கியதும் மக்கள்பயந்து பாதுகாப்பான இடங்களுக்குத் தப்பியோடினார்கள். எவருமே தீயினால் பாதிக்கப்படவில்லை.

## இலங்கையின் கண்தானம்

பதிவுசெய்யப்பட்ட கண்தானகாரர்களின் மாபெருங்குழு ஒன்றைத் தற்போது இலங்கை கொண்டிருக்கிறது. அதனால் கண்கள்தேவைப்படும் பிறநாடுகளுக்கு வருடம்ஒன்றுக்கு 200புத்தம்புதிய கண்களைக் கொடுத்துதவக்கூடிய நிலைமையில் இருந்துவருகிறது. அத்துடன் அவசியகமாகத் தேவைப்படுமிடத்துக் கண்ணீர்இல்லாது வற்றச்செய்த கண்ணின்மேற்படலங்களைப் பெருந்தொகையாக அனுப்பிவைக்கக் கூடியதாயும் இருக்கிறது. கடந்த28மாதங்களிலும் 170 பேருக்குக் கண்பார்வையைத் திரும்பவும் அளிப்பதற்கென்று 14வெளிநாட்டுக் கணவங்கிகளுக்கு இலங்கை கண்கள் உதவியிருக்கிறது. அத்துடன் இலங்கையிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளின் கண்தேவைகளையும் பூர்த்திசெய்திருக்கிறது.

## ஆசிய கண்வங்கி

ஆசிய–பசிபிக்நாடுகளின் கண்கள் சம்பந்தமான கல்விக்கழகங்களின் மூன்றுவதுமகாநாடு சென்ற7ஆம் திகதிமுதல் 10ஆம்திகதிவரை சிங்கப்பூரில் நடந்தேறியது. அதற்குச்சமுகமாயிருந்த பிரதிநிதிகள் ஆசியகண்வங்கியைச் சிங்கப்பூர், ஹொங்கொங், இலங்கையாகிய மூன்றுநாடுகளுள் ஒன்றிலே ஸ்தாபிக்கவேண்டுமென்று ஆலோசனை கூறினார்கள். ஈற்றில் அதற்குத் தகுதியான இடம் இலங்கைதானென்று கண்டறியப்பட்டுள்ளது. கொழும்பிலே 1965ஆம்ஆண்டுமுதல் சர்வதேச கண்வங்கிஒன்று இருந்துவருவதும், இலங்கைதான் பதிவுசெய்யப்பட்ட கண்தானகாரர்களைப் மிகப்பெருந்தொகையாகக் கொண்டிருப்பதும், தேவைப்படும் நாடுகளுக்கு வருடம்ஒன்றுக்கு 200புத்தம்புதிய கண்களைத் தானஞ்செய்யக்கூடிய நிலைமையிலிருப்பதும் அதற்குக் காரணமாக எடுத்துக்கூறப்பட்டது.

## கோட்டைக்குள்ளே குத்துமல்லு

அங்கே ஐரோப்பியநாடுகளில் ஒன்றுய செக்கோசிலவாகிய பிரச்சினையையிட்டு இங்கே இலங்கைச் சனப்பிரதிகள்சபையின் எதிர்க்கட்சியான கூட்டுக்கட்சிகளிடையே பெரும்பிளவு உண்டாயிருக்கிறது. சமசமாசக்கட்சியைச்சேர்ந்த ஒருபலம்பொருந்திய பிரிவு அங்கே அலெக்சாண்டர் டூபெக்கைத தலைமையாகக்கொண்ட தற்போதைய செக்கோசிலவாகிய அரசாங்கம் நிற்கும்நிலையையிட்டுப் பகிரங்கமாக ஆதரவுதெரிவித்து அதற்குச்சார்பாக நிற்கின்றது. ஆனால் கம்யூனிஸ்தகட்சியினரும் (மஸ்கோ) ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் சிலபிரிவினரும் சோவியற்ருஷியாவுக்கு ஆதரவளித்து நிற்கின்றனர். லங்கா சமசாமச கட்சியைச் சேர்ந்த அநேகர் டூபெக்கின் சுதந்திர சோஷலிஸ்த ஆட்சிமுறையை ஆதரித்துத் தலைமைப்பீடம் ஓர்அறிக்கையைப் பிரகடனஞ்செய்யவேண்டுமென்றும், செக்கோசிலவாகியாவை ஆதரித்துப் பகிரங்க ஆர்ப்பாட்டங்கள் நடத்தவேண்டுமென்றும் கேட்டுநிற்க, கம்யூனிஸ்தகட்சியினரோ சோவியற் கொள்கையை ஆதரிப்பதுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரின் ஆதரவைத்தேடுவதிலும் முனைந்திருக்கின்றார்கள்.

# உருளும் உலகிலே

● முதலாவது உலகயுத்தத்திலே அமெரிக்கா சேர்ந்துகொண்டபோது 1915ஆம்ஆண்டு ஆழ்த்திவிடப்பட்டு ஆயிரக்கணக்கான அமெரிக்கரைப் பலிகொண்ட லூசித்தானியா என்ற பாரியபிரயாணக்கப்பலை மிதத்திவெடுப்பதற்கான தீவிரமுயற்சி இப்போது நடைபெற்றுவருகிறது. இந்தக்கப்பல் தெற்கு ஐரிஷ் கடற்கரைக்கப்பால் சுமார்10மைல தூரத்திலே 300அடி ஆழத்தில் கிடக்கின்றது.

● உலகில் இரத்தவங்கிகள் இருப்பதுபோல ரூஷியாவிலே எலும்புவங்கிகள் இருந்துவருகின்றன. அங்குள்ள ஆஸ்பத்திரிகளிலே கை,கால்எலும்புகள் உட்படப் பலவகை எலும்புகளை மாற்றும் சிகிச்சை சர்வசாதாரணமாக நடைபெறுகிறது. இந்தஎலும்புமாற்றச் சிகிச்சைகளுக்கான எலும்புகள் இறந்தவர்களின உடம்புகளிலிருந்து எடுத்துச் சேமிக்கப்படும் எலும்புவங்கிகளிலிருந்து பெறப்படுகின்றன.

● இந்தியாவிலே சிகறெற்ஆதியன புகைப்பது சீக்கியதர்மத்துக்கு ஒவ்வாது. ஹைதராபாத்நகரிலே அன்று ஒருதெலுங்குப்படக் காட்சியில் சீக்கியவர்ஒருவர் சிகறெற் புகைப்பதாகக்காட்டும்காட்சியைக் கண்டதே கொதிப்படைந்த சிலசீக்கிய ரசிகர்கள் மேடைமீதுபாய்ந்து படம்காட்டும் திரையைக் கிழித்துவிட்டார்களாம்.

● 1967ஆம்ஆண்டு ரூஷியாவிலிருந்து வெளியேறிய ஸ்ராலினின் மகள் ஸ்வெற்லானா அலிலூயேலா அமெரிக்க பிரசாஉரிமை பெறவிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. நித்தியசஞ்சலமும், சிறைக்கூடமும் போன்றதுதான் ரூஷியாவென்று இவர்கருதுகிறார். இவர் சமீபத்திலே தனதுரூஷியபாஸ்போட்டைத் தீயிலிட்டு எரித்துவிட்டாராம்.

● எத்தியோப்பியாவிலுள்ள பிராணிகளின்தொகை அந்நாட்டுமக்களின் தொகையிலும் நாலுமடங்குக்கு மேற்பட்டதாம். அங்கே குதிரைகள், மாடுகள், கோவேறுகழுதைகள், கழுதைகள், ஒட்டகங்கள், ஆடுகள் என்பனவாய் 9கோடியே90லட்சம்பிராணிகள் இருக்கின்றனவாம், மாடுகள்மட்டும் 90லட்சமாகும். ஆனால்,மக்கள்தொகை 2கோடியே 30லட்சமாகும்.

● உலகில் இன்று மிகநீண்டகாலமாகத் தமதுநாட்டை ஆண்டுவருகிறவர்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருப்பவர் ஸ்பானியாவின்தலைவரான ஜெனறல் பிரான்சிஸ்கோ பிராங்கோ அவர்களே. இவர் கடந்த32வருடகாலமாகத் தமதுநாட்டை ஆட்சிசெய்து வருகின்றார். அப்போது ஸ்பானிய தேசியவாதிகளின் தலைவராயிருந்த இவர் அங்கு குடியாசுவாதிகளைச் சரணகதி அடையச்செய்து 1936ஆம்ஆண்டு அந்நாட்டின் தலைவராயினார்

● 1929ஆண்டுக்குப்பின் முதன்முறையாகத் திருச்சபையின் பூரணமான "அற்லஸ்"எனப்படும் தேசப்படம்ஒன்று றோமைநகரில் பிரசுரமாகியிருக்கிது. நான்குவர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ள இப்புத்தகம் படிப்படியாக வளர்ச்சியடைந்துவரும் திருச்சபையின் பூகோளஅமைப்பையும், புள்ளிவிபரங்களையும் வர்ணித்து, ஐந்துபாஷைகளிலே விளக்கமும் கொடுத்திருக்கிறது.

● வருகிறகார்த்திகைமாதம் 5ஆம் திகதி அமெரிக்க புதியஜனாதிபதித் தேர்தல் நடந்தேறவிருக்கின்றது. குடியரசுக்கட்சி, ஜனநாயககட்சி என்பனவாய் அங்குள்ள இருபிரதான கட்சிகளிலே குடியரசுக்கட்சியின் அபேட்சகராகத் திரு. றிச்சேட் நிக்சன் ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டிருக்கின்றார். இவர் ஜனாதிபதி ஐசனஹோவர் காலத்தில் உபஜனாதிபதியாகப் பதவிவகித்தவர். சென்ற ஜனாதிபதித் தேர்தலில் திரு. ஜோன் கென்னடியுடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்,

● இன்றைய உலகிலே மிகநீண்டகாலம் தமதுநாட்டை ஆண்டுவருகிறவர்களில் முதலாவதுஇடத்தைப் பெற்றிருப்பவர் போர்த்துக்காலின் சர்வாதிகாரியாகிய டக்றர் சலாசர்அவர்களே. இவர் கடந்தநாற்பதுஆண்டுகளாகத் தமதுநாட்டை ஆட்சிசெய்துவருகின்றார். இரண்டாவது உலகயுத்தத்தில் கலந்துகொள்ளாத நாடுகளில் போர்த்துக்காலும் ஒன்றாகும்.

● சின்னப்பபாப்பரசர் 1970ஆம் ஆண்டிலே ஆஸ்திரேலியாவுக்கு விஜயம்செய்யலாமென்று மெல்போன் நகரின் றெனல்ட் நொக்ஸ்அதிமேற்றிராணியார் அறிவித்திருக்கின்றார். 150வருடங்களுக்குப்பின் இத்தாலிக்குவெளியே பிரயாணஞ்செய்த முதலாவதுபாப்பரசரான அவரை ஆஸ்திரேலியாவுக்கு விஜயம்செய்யுமாறு தாம்கேட்டபோது அளிக்கப்பட்ட பதில் தமக்குஊக்கமளிப்பதாய் இருந்ததாக அவர் தெரிவித்திருக்கின்றார்.

● சென்னைஇராச்சியத்தில் எட்டு வைத்தியகல்லூரிகள் இருந்துவருகின்றன. இந்தஎட்டுக்கல்லூரிகளிலும் முதலாவதுவருடவகுப்பில் சேர்ந்துபடிக்க 382மாணவர் மாணவிகள் தெரிவுசெய்யப் பட்டிருக்கிறார்கள். இவர்களில் 38சதவிகிதமானோர்—அதாவது சுமார்145பேர் பெண்களென்று அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

● உலகில் முதலாவதென்று உரிமைபாராட்டப்படும் செயற்கை அரிசித் தொழிற்சாலைஒன்று பான்டங்நகரில் திறக்கப்பட்டிருக்கிறது. இத்தொழிற்சாலை மரவள்ளிக்கிழங்கு, சோளம், பருப்பு ஆதியனகொண்டு இந்தச் செயற்கை அரிசியை உற்பத்திசெய்கிறது. இயற்கை அரிசியைப்போன்று இதுவும் அதேஊட்டச்சத்துப் பொருள்களைக் கொண்டிருக்கிறதாம்.

● மனிலாநகரிலே 62வயதுடைய பாச்கோறுஎன்பவர் ஆடுமாடுகள், குதிரைகளை இழிவுக்கேதுவானவிதமாய் வைத்திருந்ததற்காகப் பிலிப்பைன்ஸ்நீதிஸ்தலத்தில் ஐந்துபவுண் அபராதம் விதிக்கப்பட்டிருக்கின்றார். தனதுஆடுமாடுகள், குதிரைகளில் வியெற்னும் யுத்த எதிர்ப்புச் சுலோகங்களை வர்ணமைகொண்டு எழுதிவிட்டமைதான் இவர்செய்தகுற்றமாகும்.

● இங்கிலாந்திலே பிறெஸ்ரன்நகர் புனிதவில்பிறெட்டின் ஆலயத்தில் சென்றஆடிமாதம் 10-ந்தேதி போர்லே மேற்றிராணியாரால் வண. அன்ட்று நோபிளெற்பிறதர் குருத்துவாபிஷேகம் செய்யப்பட்டபோது அவர்பெற்றாரும், ஒன்பதுசகோதரர்களும், நான்குசகோதரிகளும் சமுகமளித்திருந்தனர். சகோதரர்களில் ஆறுபேர் பலிபீடத்தில் சேவைசெய்தார்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் [illegible] 1968ஆம்ஞு ஆவணிமீ 24-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org